## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியினதும் (“கம்பனி”) மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (“தொகுதி”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியினதும் மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (தொகுதி) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### முக்கியத்துவமான விடயங்கள்

நிதி கூற்றுக்களின் குறிப்பு 1.3 இனை எனது கவனத்தில் கொள்கின்றேன். மேலே குறிப்பில் கூறப்பட்டதன் படி, தாய் கம்பனியாக பொறுப்பேற்று மற்றும் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தால் இயக்கப்படும் மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகும். 2018 ஆகஸ்ட் 28 இல் நடத்தப்பட்ட கூட்டத்தில் அமைச்சரவை குழுவானது வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியினை கலைப்பதற்கும் மற்றும் மத்திய வங்கியின் அனுமதியின் கீழ் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனியினை வேறு முதலீட்டாளருக்கு விற்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும், 2020 பெப்ரவரி 26 திகதியிடப்பட்ட புதிய அமைச்சரவை குறிப்பாணை மேலே கூறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ்ஸின் 49 சதவீத பங்கு மூலதனத்தை விற்பனை செய்வதற்கும் மற்றும் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் இன் மறுகட்டமைப்பு செயற்பாடு முடிவடையும் வரை வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியினை கலைப்பதனை இடைநிறுத்துவதாகவும் திருத்தியமைப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், 2020 ஒக்டோபர் 26 இல் வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் இனை கலைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் (சிபிஎஸ்எல்) நாணயச் சபையினால் 2020 மே 31 இல் தொடங்கும் ஆறு மாத காலத்திற்கு முதற்தர வணிகராக வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு கம்பனிக்கு உள்ள அனுமதி தடைசெய்யப்பட்டிருந்தது. பின்னர் அந்த இரண்டு கம்பனிகளையும் கலைப்பதற்கு 2020 ஒக்டோபர் 26 ஆந் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2020 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் அனுமதிப் பத்திரத்தை நீக்குவதற்கு கமபனியின் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்தை கவனத்தில் கொண்டதன் பின்னர் 2020 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் முதற்தர வணிகராக செயற்படுவதற்கு நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள நியமனத்தை அகற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானம் எடுத்திருந்தது. இந்த விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயத்தில் மாற்றம் ஏற்படவில்லை.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தொகுதியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தொகுதியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள்,

புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- தொகுதியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

ஐஐ

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் லிமிடெட்**<br>கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் வேறுபாடுகள் மற்றும் வழுக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 08) இன் 42 ஆம் இலக்க பந்திக்கு முரணாக கம்பனியால் 2009/2010, 2010/2011, 2011/2012, 2013/2014, 2014/2015, 2015/2016 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 304,536,754 வருமான வரி பொறுப்புக்கள் மற்றும் மீளாய்வாண்டில் 2013, 2014 மற்றும் 2017/2018 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 100,895,298 ஆன பெறுமதி சேர் வரி பொறுப்பொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முதற்தர வாடிக்கையாளர் (PD) இரண்டாம் நிலை சந்தையின் கொடுக்கல் வாங்கல்களுக்காக வருமான வரிக்கு கடப்பாடு இல்லாதிருந்த போதும், வருமான வரி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி (NWSL) வரி அறிக்கை கோவையிடப்பட்டமையால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு (DIR) அது ஏற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டிற்காகவும் மதிப்பீட்டு அறிக்கை விநியோகித்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. கம்பனி மேற்கூறப்பட்ட வரி அறிக்கை சமர்ப்பித்திருந்ததுடன், வரி பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி (NWSL) பெறவேண்டியதாக கணக்கீடு செய்திருந்தது. இறுதி விடயமாக வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் குறைபாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், | நியமம் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழக்கு 04 முதல் 05 வருடங்கள் வரை தொடர்ச்சாயாக நடைபெற்றது. அதனால் இந்த பெறவேண்டிய 04 முதல் 05 வருடங்கள் வரையான சகல பெறவேண்டியவைகள் பெறவேண்டிய பணமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கட்டிடத்திற்காக முற்பணமாக செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 1,756,755 மீளாய்வாண்டில் ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன், முற்பணமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்டிட வாடகை உடன்படிக்கையின் படி கட்டிட வாடகை முற்பணம் ரூபா 1,756,755 தொகை 2018 ஏப்ரல் மாதம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த முற்பண செலுத்துதல்கள் O/S வாடகை ஈடு செய்யப்பட்டு 2021 ஏப்ரல் மாதத்தின் போது கொடுக்கல் வாங்கல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், இது 2021 இன் போது கணக்குகளுக்கு கொண்டுவரப்படாதிருந்ததுடன் இது 2022 ஆம் ஆண்டின் போது நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | ஈடுசெய்யப்பட்ட முற்பணம் கணக்குகளில் சீராக்கப்படல் வேண்டும். |
| (ஆ) கம்பனியின் ஊழியர் ஒருவர் 2016 ஆம் ஆண்டில் இருந்து வரையறுக்கப்பட்ட கொமிர்சியல் வங்கியுடன் ரூபா 15,434,850 சட்ட ரீதியற்ற கொடுக்கல் வாங்கல்களில் கைச்சாத்திட்டிருந்தார். மேலும், கம்பனி 2019 திசெம்பர் 24 ஆம் திகதி குற்றப்புலானய்வு திணைக்களத்திற்கு (CID) முறைப்பாடு செய்திருந்தது. எனினும், இந்த விடயம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் குற்றப்புலாய்வு திணைக்களம் (CID) விசாரணைகளை ஆரம்பித்திருந்ததுடன், முன்னால் ஊழியர் கம்பனியின் நிதியத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், ரூபா 400,000 வீதம் தவணையாக முழுத்தொகையையும் செலுத்துவதற்கு இணங்கியிருந்ததுடன், குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு (CID) வழங்கப்பட்டிருந்ததுடன், ஒரு தவணை 2021.12.31 செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவர் வரையறுக்கப்பட்ட நெஷனல் வெல்த் கோப்பரேஷனுக்கு (NWCL) இணங்கியிருந்த தவணைப் பணம் செலுத்தவில்லை. குற்றப்புலனாய்வு திணைக்களம் (CID) விசாரணைகளை ஆரம்பித்திருந்ததுடன், ஊழியரை பொறுப்பேற்று நீதிமன்றத்திற்கு | பொருண்மையான சட்ட ரீதியான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பித்திருந்ததுடன், நீதிமன்றத்தால் பிணையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டதுடன், தற்போது வழக்கு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. | |
| | **நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் லிமிடெட்** | | |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 5,573,700 பெறுமதியான சட்ட மற்றும் ஏனைய தொழில் கட்டணங்கள் மீளாய்வாண்டிற்காக நிர்வாக செலுலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | கடந்த ஆண்டிற்காக செலவிடப்பட்ட செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்ய முடியாது. |

### 1.5.3 இணக்கம் செய்யப்பட்டாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் | உரிய அறிக்கையின் பிரகாரம் | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | துணைக் கம்பனிகளில் முதலீடு | 1,148,600,000 | 1,175,000,070 | 26,400,070 | வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் இனால் ஒதுக்கத்தை பயன்படுத்தி வரையறுக்ககப்பட்ட நெஷனல் வெல்த் கோப்பரேஷன் (NWCL) பங்குகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மிகை ஊதிய விநியோகித்தல் ரூபா 26,400,070 வரையறுக்கப்பட்ட நெஷனல் வெல்த் கோப்பரேஷன் (NWCL) கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. பங்குச் சான்றுதழும் வரையறுக்கப்பட்ட நெஷனல் வெல்த் கோப்பரேஷனுக்கு கிடைத்திருந்தது. வரையறுக்கப்பட்ட நெஷனல் வெல்த் கோப்பரேஷன் (NWCL) இல் முதலீட்டு பெறுமதி அதிகரித்து 2022 ஆம் ஆண்டின் (2022.12.31) வரையறுக்கப்பட்ட நெஷனல் வெல்த் கோப்பரேஷன் இன் (NWCL) கணக்குகளில் இந்த சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதியுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | செலுத்த வேண்டிய மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | - | 3,496,345 | 3,496,345 | 2021 ஆம் ஆண்டின் போது கம்பனிகளுக்கு இடையிலான கணக்குகள் இணக்கம் செய்யப்படவில்லை. இந்த இணக்கங்கள் மேற்கொண்டு 2022 ஆம் ஆண்டின் போது கைவிடப்பட்டவை சரி செய்யப்பட்டுள்ளது. | கம்பனிகளுக்கு இடையிலான மீதிகளை இணக்கம் செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் லிமிடெட்** | | | | |
| Repo முதலீடு | 94,304 | வைப்புச் சான்றிதழ் | இது இனங்காணப்படாத மீதியாக இருந்தது. கம்பனியை கலைப்பதற்காக தீர்மானிக்கப்பட்டமையால் கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. | மீதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வருமான வரி ரூபா 13,044,600 ஆக இருந்ததுடன், ரூபா 12,962,617 பெறுமதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிலுவையான இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். வரி மீளச் செலுத்டதுதல் விண்ணப்பித்திருந்ததுடன், உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் பணத்தை மீள் செலுத்துதல் விரைவுபடுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட நெஷனல் வெல்த் கோப்பரேஷன் (NWCL) இல் நடவடிக்கை எடுக்கின்றது. | பெறவேண்டிய மீதிகளை தாமதம் இன்றி அறவிடல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 03 வருட காலத்திற்காக ரூபா 14,730,273 பெறவேண்டியவைகள் நிலுவையான காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 20,169,509 நட்டமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 48,294,511 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 68,464,020 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முதலீட்டு வருமானம் ரூபா 60,158,620 இனால் குறைவடைந்தமை மற்றும் நிர்வாக செலவினம் ரூபா 19,947,244 இனால் குறைவடைந்தமைக்கு எதிராக நிதிக் கிரயம் ரூபா 40,847,253 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.